செ.வெ.எண்.251 நாள்.07.09.2019

**காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில் ஸ்ரீ அத்திவரதர் வைபவம் –2019ல் சிறப்பாக பணிபுரிந்த அரசு அலுவலர்களுக்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர்.திரு.எஸ்.இராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் ஆகியோர் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.**

காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில் ஸ்ரீ அத்திவரதர் வைபவம் –2019ல் சிறப்பாக பணிபுரிந்த அரசு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மக்கள் நல்லுறவு கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத் துறை முதன்மை செயலர்/ஆணையர் திரு.க.பணீந்திரரெட்டி இ.ஆப.., அவர்கள் தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர்.திரு.எஸ்.இராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் ஆகியோர் இன்று (07.09.2019) பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பரிபூரண ஆசியுடனும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில், 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் ஸ்ரீ அத்திவரதர் வைபவம் மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவத்தினை மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கும், சேவார்த்திகள் எவ்வித இடர்பாடும் இன்றி ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்வதற்கும் மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்த இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட வருவாய் துறை அலுவலர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பிறதுறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இரவு பகல் பாராமல் அயராது பணிபுரிந்த இந்து சமய அறநிலையத் துறை அலவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ அத்திவரதர் வைபவ நிகழ்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.1 இலட்சம் அளிக்கப்பட்டு துவங்கப்பட்ட அன்னதானம் வழங்குதல் பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பினை பெற்றது. மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் ஸ்ரீ அத்திவரதர் உற்வசத்திற்கு சென்னை மாநகராட்சியின் சார்பாக ரூ.25 இலட்சம் நிதி வழங்கினார். மேலும், 46 தனியார் தொண்டு அமைப்பினர் அன்னதானம் வழங்குதல் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். அத்திவரதர் வைபவம் தொடர்பான பூர்வாங்கப் பணிகள் 19.04.2019 அன்றே ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் காவல் துறை சார்பாக பணிபுரிந்து 342 அதிகாரிகளுக்கும், 28,190 காவலர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் நகர் முழுமையும் துப்புரவு பணியில், 173 அதிகாரிகள் மேற்பார்வையில் 4118 பணியாளர்கள் மூலம் அவ்வப்போது குப்பைகளை இரவு பகல் பாராமல் அகற்றியும், அதற்கு உறுதுணையாக பணியாற்றிய நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலர்கள் 34 பேர் மற்றும் 213 பணியாளர்கள் ஆகியோருக்கும் இந்நேரத்தில் நன்றியினை உரித்தாக்குகிறேன். இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து பணிகளை செம்மையாக நடத்தி தந்த திட்ட அலுவலர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

இவ்வைபவத்தில், அதிகாரிகள் முதல் சேவார்த்திகல் வரை, வைபவம் தொடங்குவதற்கு முன்னதாகவே திருக்கோயில் மற்றும் சுற்றுப்புறங்களில் மருத்துவ முகாம் அமைத்து, சுழற்சி முறையில்

பணிபுரிந்து மருத்துவ பெருமக்களுக்கு 974 செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுககும், உயிர்காக்கும் சேவையை மனித நேயத்துடன் செய்த சுகாதாரத்துறை அலுவலர்களை பாராட்டி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வைபவத்தில் மிகச்சிறப்பாக க்யூ லைன், தற்காலிக பந்தல்கள், தற்காலிக பேருந்து நிலையங்கள், பக்தர்கள் இளைப்பாறும் கூடங்கள், அவற்றை போர்கால அடிப்படையில் அமைத்து அவற்றிற்கு தகுந்த மின் வசதிகள், மின் சாதனங்களை உடனுக்குடன் பொருத்திய பொதுப்பணித்துறை 34 அலுவலர்கள் மற்றும் 20 பணியாளர்களையும் பாராட்டி நன்றியினை உரித்தாக்குகிறேன்.

காஞ்சி நகருக்கு வரும் அனைத்து சாலைகளையும் செப்பனிட்டு, போக்குவரத்துக்கு தடங்கல் ஏற்படா வண்ணம், இவ்வைபவம் துவங்குவதற்கு முன்னபே பணிகள் நிறைவாக செய்திருந்த நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் நகரங்களிலிருந்து வருகை தந்த சேவார்த்திகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில், சிற்றுந்து (மினிபஸ்) மூலம் அந்தந்த தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து, திருக்கோயில் அருகாமை வரை இரவு பகலாக பேருந்துகளை இயக்கிய போக்குவரத்து துறை அதிகாரிகளையும், கண்தூஞ்சாமல் பாடுபட்ட அனைத்து, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களை இச்சமயம் பாராட்டி நன்றி கூறுகிறேன். அதேபோல், அனைத்து உள்ளூர் மகிழுந்துகளுக்கும், “உள்ளூர் வாகனம்” என பிரித்தறிந்து வாகனங்களை இயக்குவதற்கு வழிவகை செய்த, மண்டல போக்குவரத்துத்துறை அதிகாரிகளுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர் முழுவதும் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு ஏற்றார்போல், அளவீடுகள் செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உறுதுணையாக இருந்த நில அளவைத் துறை 12 அலுவலர்கள் மற்றும் 7 பணியாளர்கள் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினர் மிகச் சிறப்பாக பணிபுரிந்து, மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் ஸ்ரீ அத்தி வரதரை எளிதில் தரிசனம் செய்வதற்கு சக்கர நாற்காலினை இயக்கியும், வரிசையினை ஒழுங்கு படுத்திய காவல்துறையினருக்கு நன்றிகள்.

ஸ்ரீ அத்திவரதர் வைபவம் முழுவதும், நகரின் அனைத்து பகுதிகளுக்கும், தங்கு தடையின்றி குடிநீர் வழங்கிடவும், காவிரி நதி நீரை போர்கால அடிப்படையில் பெற்றுத்தந்த குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நன்றி கூறி இச்சமயத்தில் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

மிக முக்கியமாக, இவ்வைபவம் தொடங்கும் முன்னரே, நகரத்தில் உள்ள அனைத்து மின்மாற்றிகளையும், உயர் அழுத்த வோல்டோஜை மேம்படுத்தியும், திருக்கோயிலின் மாடவீதிகள் மற்றும் நகர் முழுவதும், பூமிக்கடியில் கேபிள்கள் பதித்தும், இந்த வைபவத்தில் ஒரு நிமிடம் கூட மின் தடையின்றி 24 மணி நேரமும் தங்கு தடையற்ற மின்சாரம் வழங்கியும், மிகச்சிறப்பாக பணிபுரிந்த மின்வாரிய அதிகாரிகளுக்கும், மின் பணியாளர்களுக்கும் நன்றி பாராட்டுக்கள்.

இவ்வைபவம், தொடர்பாக அனைத்து விளம்பரங்கள், அறிக்கைகள் கால நேர விவரங்கள், செய்திகள் அனைத்தினையும் அவ்வவ்போது பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்திகள் வெளியிட்ட செய்திகள் தொடர்புத்துறை அலுவலர்களை பாராட்டுக்கிறேன்.

நிறைவாக, இத்திருக்கோயில் நிர்வாகத்திற்கும், அனைத்து சேவார்த்திகளுக்கும் நல்லமுறையில் தரிசனம் செய்துவித்த இத்திருக்கோயில் பட்டாச்சரியார்கள், ஸ்தானிகர்கள் மற்றும் இத்திருக்கோயில் பணியாளர்கள் அனைவரையும் இத்துறையின் சார்பாக பாராட்டி மகிழ்கிறேன்.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ அத்திவரதர் வைபவ நிகழ்வினை உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து தரிசனம் செய்ய மக்கள் பெருவெள்ளம் அணையயென திரண்டு வந்தனர். அனைத்து வகையிலும் பாதுகாப்போடும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தந்த 39,000த்திற்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஸ்ரீ அத்திவரதர் வைபவ காலகட்டத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றிய அனைத்து துறை அலுவலர்களையும் பாராட்டப்பட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பம். அதனடிப்படையில் இன்றைய தினம் பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரிடையாகவே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வந்து அத்திவரதர் வைபவம் ஆய்வுக்கூட்டம் நடத்தினார். ஒவ்வொரு நாளும் திருக்கோயிலில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை குறித்து ஆராய்ந்து அவ்வப்போது அறிவுரைகளை வழங்கினார். அதன் அடிப்படையில் அரசு தலைமை செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களும் சிறப்பு கவனம் செலுத்தி தேவையான அடிப்படை வசதிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கினார்கள். இவ் ஆலோசனைப்படி மாவட்ட நிர்வாகம் சிறப்பாக பணிகளை செய்தது. மேலும், அனைத்து துறை அலுவலர்களும், இரவு, பகல் பாராமல் கண்விழிந்து உழைத்த அனைத்து அரசு நிலை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் புரட்சித்தலைவி அம்மா மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.க.பாஸ்கரன் இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் திரு.என்.சுப்பையன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., வடக்கு மண்டல காவல் துறை தலைவர் திரு.நாகராஜ் இ.கா.ப., காஞ்சிபுரம் சரக காவல் துணை தலைவர் திருமதி.தேன்மொழி இ.கா.ப., செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு.தூசி கே.மோகன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் வாலாஜாபாத் பா.கணேசன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தெ.கண்ணன் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.